(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 2(7).]

# பாராளுமன்றம்

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2023 செப்தெம்பர் 15 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா. 56/2023

கௌரவ கபீர் ஹஷீம்

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ (டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல

கௌரவ அநுராத ஜயரத்ன

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி

கௌரவ வேலு குமார்

கௌரவ எம். உதயகுமார்

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய,— நீடித்து நிலைக்கக்கூடிய அபிவிருத்தி இலக்குகளுக்கான ஐக்கிய நாடுகள் 2030 நிகழ்ச்சிநிரல் மீதான பாராளுமன்றத்தின் தெரிகுழு,— ஐக்கியநாடுகள் பொதுச்சபை அதன் A/RES/70/1 தீர்மானமானது இலட்சியமான பதினேழு நீடித்து நிலைக்கக் கூடிய அபிவிருத்தி இலக்குடன், (SDGs) நீடித்து நிலைக்கக்கூடிய அபிவிருத்திக்கான நிகழச்சிநிரல் 2030 ஆரம்பித்துள்ளதாதலாலும்;

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கமும் இத் தீர்மானத்தை அங்கீகரித்ததுடன், இந் நிகழ்ச்சிநிரலை அமுல்படுத்துவதற்காக சலிப்பின்றி பணியாற்றுவதற்கு அர்ப்பணித்துள்ளதாலும்;

நீடித்து நிலைக்கக்கூடிய அபிவிருத்தி இலக்குகள் நீடித்து நிலைக்கக்கூடிய அபிவிருத்தியின் பொருளாதார, சமூக, சுற்றாடல் பரிமாணங்களை ஒன்றாக இணைத்து ஒன்றுக்கொன்று இணைந்த கட்டமைப்பொன்றை உருவாக்குவதனாலும்;

பாராளுமன்றங்களானவை அவற்றின் சட்டமாக்கல், வரவு செலவுத்திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகள் ஊடாக இந்த இலக்குகளை யதார்த்தமாக்குவதில் முன்னிலையானவையாக உள்ளதாலும்;

இலங்கையில் ஐக்கிய நாடுகளின் 2030 நீடித்து நிலைக்கக்கூடிய அபிவிருத்திக்கான நிகழ்ச்சிநிரலை யதார்த்தமாக்குவதை உறுதிப்படுத்தும் முகமாக, பின்வருன தொடர்பாக விடயங்களைக் ஆராய்ந்து சிபாரிசுகளைச் செய்வதற்கும் பாராளுமன்றத் தெரிகுழு ஒன்று நியமிக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது:—

(அ) உரிய நிரல் அமைச்சுக்களுடன் கலந்தாலோசித்து தேசிய கொள்கைகளை வகுத்தலும் மற்றும் சட்டங்களை ஆக்குதலும்;

(ஆ) போதிய உள்நாட்டு வளங்களை ஒதுக்குதலும், சர்வதேச நிதி வளங்களைக் கண்டறிதலும்;

(இ) அரசாங்க அமுல்படுத்தும் முகவராலயங்களுக்கிடையே ஒருங்கிணைப்பை மேற்கொள்ளுதல்;

(ஈ) மத்திய, அரசாங்க, மாகாண மற்றும் உள்ளூராட்சி மட்டங்களில் வலையமைப்பினை ஏற்படுத்தல்;

(உ) அரச - தனியார் பங்காண்மையை ஊக்குவித்தல்;

(ஊ) ஐக்கிய நாடுகள் முகவரகங்களின் மற்றும் சிவில் சமூக நிறுவனங்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளல்;

(எ) பிராந்திய மற்றும் சர்வதேச மட்டங்களில் நாடுகளிடையே நிபுணத்துவத்தையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொள்ளல்;

(ஏ) பிரத்தியேக தரவுத்தளத்தை விருத்தி செய்வதுடன் காலத்திற்கு காலம் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்;

(ஐ) நீடித்து நிலைக்கக்கூடிய அபிவிருத்திச் (SDG) செயலகம் மூலமாக நாட்டினால் தலைமை தாங்கப்படும் மதிப்பீடுகளை நடைமுறைப்படுத்தல்; மற்றும்

(ஒ) மேற்படி விடயங்களுடன் தொடர்புடைய அல்லது இடைநேர்விளைவான எல்லா விடயங்களையும் பரிசீலித்தல்.

2. (அ) குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், குழுவானது இருபதிற்கும் (20) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது —

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) மேற்படி விடயங்கள் தொடர்பில் விரிவான ஆய்வினை மேற்கொள்வதற்காக குழு அவசியமென தீர்மானிக்கும் வகையில், குழுவின் முன் தோன்றுமாறு எவரேனும் ஆளை அழைப்பதற்கும், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவை சமர்ப்பிக்குமாறு பணிப்பு விடுப்பதற்கும், அத்தகைய அனைத்து சாட்சிகளையும் எழுத்து மூலமாகவோ, வாய்மூலமாகவோ பெற்றுக்கொள்வதற்கும்;

(இ) குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் சிறப்பறிஞர்கள் மற்றும் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

(ஈ) பாராளுமன்றத்தின் ஏதும் ஒத்திவைப்பினால் அல்லது பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைப்பினால் தடைபெறாது காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும், கூடுவதற்கும்;

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழுவானது அதனது முதல் கூட்டத்திலிருந்து ஒரு வருடத்தினுள் அல்லது பாராளுமன்றத்தால் வழங்கப்படும் அத்தகைய மேலதிக ஒரு காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்திற்கு அதன் அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.